பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

24 04 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் இன்று மலையுடன் தேர்தல் பிரச்சாரம் முடிவுக்கு வருகிறது.

2. ஏழை எளியோர், இளைஞர், பெண்கள் மற்றும் விவசாயிகளின் நலனுக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி முக்கியத்துவம் அளித்து வருவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

3. காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள அறிவிப்புகளை நிறைவேற்ற தமது கட்சி முனைப்புடன் ஈடுபடும் என்று அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

4. தமிழகத்தின் அண்டை மாநிலங்களில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில், எல்லைப்பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணிக்கு எதிரான ஆட்டத்தில் லக்னோ அணி ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் இன்று மலையுடன் தேர்தல் பிரச்சாரம் முடிவுக்கு வருகிறது.

வரும் வெள்ளிக்கிழமை 13 மாநிலங்கள் மற்றும் யுனியன் பிரதேசங்களில் உள்ள 89 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்த தொகுதிகளில் அரசியல் கட்சி தலைவர்கள் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சத்திஷ்கர் மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி, ஏழை எளியோர், இளைஞர், பெண்கள் மற்றும் விவசாயிகளின் நலனுக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி முக்கியத்துவம் அளித்து வருவதாகக் கூறினார்.

உத்திரபிரதேசத்தில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட பிஜேபி மூத்த தலைவர் திரு ராஜ்நாத்சிங், மத்தியிலும், மாநிலத்திலும் பிஜபி தலைமையிலான அரசு அமைந்துள்ளதால், உத்திரபிரதேசத்தில் அரசு நிர்வாகம், சட்டம் ஒழுங்கு ஆகியவை சிறப்பாக உள்ளதாகவும், மாநிலம் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு அகிலேஷ்யாதவ், அலிகார் தொகுதியிலும், பகுஜன் சமாஜ்கட்சித் தலைவர் செல்வி மாயாவதி மீரட்டிலும் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

கேரள மாநிலம் வயநாட்டில் பிரச்சாரம் மேற்கொண்ட காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே, ஏழை எளிய மக்கள், இளைஞர்கள் மற்றும் பெண்களின் வளர்ச்சிக்கான அறிவிப்புகள் தங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளதாகவும், இதனை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை கட்சி முனைப்புடன் மேற்கொள்ளும் என்றும் தெரிவித்தார்.

கர்நாடக மாநிலம் சித்ரதுர்காவில் வாக்கு சேகரித்த காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி வதேரா, வேலைவாய்ப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

பிஜேபி அரசு அல்லாத மாநிலங்களுக்கு மத்திய அரசு போதிய நிதியை விடுவிக்கவில்லை என்று அவர் குற்றம்சாட்டினார்.

**[]<<<>>>[]**

கர்நாடக மாநிலத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சி ஊழலில் ஈடுபடுவதாகவும், வெற்று வாக்குறுதிகளை மட்டுமே அளித்து அரசியல் செய்வதாகவும், பிஜேபி மூத்த தலைவர் திரு அமித்ஷா குற்றம்சாட்டியுள்ளார்.

பெங்களூரு தெற்குத் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாகவும், வன்முறைகள் அதிகரித்துள்ளதாகவும், கூறினார்.

தீவிரவாத கும்பலுடன் தொடர்புடைய அமைப்புகளை அக்கட்சி ஊக்குவித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையில் வளர்ச்சி சார்ந்த அரசு அமைவதற்கு மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டுமென்றும் திரு அமித்ஷா கேட்டுக்கொண்டார்.

**[]<<<>>>[]**

இதனிடையே அடுத்த மாதம் ஏழாம் தேதி நடைபெறவுள்ள மூன்றாவது கட்ட மக்களவைத் தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

இறுதி வேட்பாளர் பட்டியலில் மொத்தம் ஆயிரத்து 351 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 95 தொகுதிகளில் மூன்றாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

குஜராத் மாநிலம் சூரத் மக்களவைத் தொகுதியில் ஒரு வேட்பாளர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளாவில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில், எல்லைப்பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டிலிருந்து 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ரொக்கமோ, நகை மற்றும் பொருட்களை உரிய ஆவணமின்றி கொண்டு செல்லப்படுவதைத் தடுக்க தீவிர கண்காணிப்பை அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தை அடுத்துள்ள காரப்பள்ளம் வன சோதனை சாவடியில் நேற்று பறக்கும்படை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த பணியாளர்கள், சொந்த

மாநிலத்திற்கு சென்று வாக்களிக்க ஏதுவாக வாக்குப்பதிவு நடைபெறும் நாட்களில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்க வேணடும் என்று அந்நிறுவனங்களை தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் கீழ், இந்த விடுமுறையை அண்டை மாநிலங்களைச் சேர்ந்த தினக்கூலி, தற்காலிக, ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்படுவதை நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் நேற்று வெளியான மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கேரளாவில் நாளை மறுநாளும், ஆந்திராவில் அடுத்த மாதம் 13-ஆம் தேதியன்றும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

கர்நாடகாவில் நாளை மறுநாள் மற்றும் அடுத்த மாதம் 7ஆம் தேதி என இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது.

[]<<<>>>[]

உலகத் தரத்திலான மருத்துவக் கல்வியையும், சேவையையும் எய்ம்ஸ் வழங்கி வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் ரிஷிகேஸில் உள்ள அகில இந்திய மருத்துவக் கல்விக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், மருத்துவ கல்வித்துறையில் இந்தியா சாதனை படைத்து வருவதாகத் தெரிவித்தார்.

இந்த துறையில் அன்றாடம் மாற்றங்களும், புதிய கண்டுபிடிப்புகளும் நிகழ்ந்து வருவதாகவும், இதனை மாணவர்கள் தொடாந்து கண்காணித்து சிறப்பான சேவையை வழங்க பாடுபட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் 14 மாணவர்களுக்கு தங்கப்பதக்கங்களையும் அவர் வழங்கினார்.

திருமதி திரௌபதி முர்மு, இன்று டேராடூனில் உள்ள வனத்துறை ஆராய்ச்சி பயிற்சிக் கழகத்தில் இந்திய வனத்துறைப் பணியில் பயிற்சி முடித்த அதிகாரிகளுக்கு பட்டங்களை வழங்கி கௌரவிக்கிறார்.

இந்திராகாந்தி தேசிய வனத்துறை பயிற்சிக் கழகத்தில் வனத்துறை பணியில் புதிதாக சேர்ந்துள்ள 99 அதிகாரிகள் வெற்றிகரமாக பயிற்சியை முடித்துள்ளனர்.

நட்பு நாடான பூட்டானைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகளும் இதில் பயற்சி பெற்று பட்டங்களை பெறுகின்றனர்.

இவர்கள் பல்வேறு மாநிலங்களில் பணியமர்த்தப்படவுள்ளனர்.

**[]<<<>>>[]**

லேசான மற்றும் எடைகுறைந்த குண்டு துளைக்காத ஆடையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் வடிவமைத்து சாதனை படைத்துள்ளது.

**Bis** குண்டுகளால்கூட துளைக்கமுடியாத அளவில் ஆறாவது கட்ட பாதுகாப்புடன் இந்த நவீன ஆடை வடிவமைக்கப்பட்டுள்ளது.

சண்டிகரில் இந்த ஆடையின் திறன் குறித்து சோதனை நடத்தப்பட்டதாக பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

பொதுத்துறை வங்கிகள் நேரடியாக லுக்-அவுட் நோட்டீஸ்களை வெளியிடுவதற்கு அதிகாரமில்லை என மும்பை உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

இது தொடர்பான உத்தரவுகளைப் பிறப்பித்த நீதிபதிகள் திரு பட்டேல், திரு மகாதேவ், வங்கியிலிருந்து கடன்பெற்றவர்கள் உள்நாட்டைச் சேர்ந்தவராகவோ, வெளிநாட்டைச் சேர்ந்தவராகவோ இருக்கும்பட்சத்தில் நேரடியாக லுக்-அவுட் நோட்டீஸ்களை விநியோகிக்கக்கூடாது என்று தெரிவித்தனர்.

இருப்பினும் அவர்கள் பெற்ற கடனை வசூலிக்க முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தடையேதும் இல்லை என்றும் தெரிவித்தனர்.

**[]<<<>>>[]**

உயர்கல்வி நிறுவனங்களின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டம் குறித்த பயிலரங்கு பல்கலைக்கழக மானியக் குழு சார்பில் நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

உயர்கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்தை உயர்த்தவும், கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்குமான கூடுதல் அதிகாரத்தை வழங்குவதற்கான திட்டங்கள் குறித்து இப்பயிலரங்கில் ஆராயப்பட்டது.

தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும், தேசிய கல்விக் கொள்கையை பல்வேறு கட்டங்களில் படிப்படியாக கொண்டு வருவதற்கான காலத்தை திட்டமிடுவது குறித்தும் இதில் ஆய்வு செய்யப்பட்டது.

இப்பயிலரங்கில் பேசிய பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவர் திரு ஜக்தீஷ்குமார், இந்த திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

**[]<<<>>>[]**

சீனாவின் தெற்கு குவாங்டாங் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

26-வது உலக எரிசக்தி உச்சி மாநாடு நாளை நெதர்லாந்து நாட்டில் உள்ள ரோட்டர்டாம் நகரில் நாளை தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

உக்ரைன் நாட்டில் இந்திய தூதர் திரு ஹரிஷ் ஜெயின் அந்நாட்டின் புதிய வெளியுறவுத்துறை துணை அமைச்சர் திரு **Andri sybiha** -யாவை கீவ் நகரில் சந்தித்து பேசினார்.

**[]<<<>>>[]**

நாட்டின் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து ஏறுமுகத்தில் உள்ளதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தில்லி மதுபான கொள்கை முறைகேடு தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால், பி ஆர் எஸ் கட்சியின் திருமதி கவிதா ஆகியோரின் நீதிமன்ற காவல் அடுத்த மாதம் ஏழாம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.,

**[]<<<>>>[]**

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் உள்ள ராணுவ மையத்தில் விருந்தினர் தங்கும் இடம் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ராணுவ மகளிர் நல சங்கத்தின் மண்டல தலைவர் திருமதி ஜஸ்பிர் பிரார் நேற்று திறந்து வைத்தார்.

[]<<<>>>[]

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் அருகே 2005-ஆம் ஆண்டு நடந்த இரட்டை கொலை வழக்கில் 20 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து விழுப்புரம் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

[]<<<>>>[]

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவிலில் நடைபெற்ற சித்ரா பவுர்ணமி கிரிவலத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

[]<<<>>>[]

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலில் சித்ரா பவுர்ணமியையொட்டி ஆயிரக்கணக்கான பக்தர்கள் அகல் விளக்கு ஏற்றி வழிபட்டனர்.

[]<<<>>>[]

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருள்மிகு கூத்தாண்டவர் திருக்கோவிலில் திருநங்கைகள் தாலி அணியும் விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணிக்கு எதிரான ஆட்டத்தில் லக்னோ அணி ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த சென்னை அணி மூன்று விக்கெட் இழப்புக்கு 210 ரன் எடுத்தது.

211 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கி லக்னோ அணி 19 புள்ளி மூன்று ஓவரிலேயே நான்கு விக்கெட்களை இழந்து 213 ரன் எடுத்து வெற்றிபெற்றது.